**செ. கு. எண்:155** **நாள்: 13.10.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 13.10.2017

சென்னை பெருநகர காவல், மோட்டார் வாகனப்பிரிவு–1–ல், தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. கி. இருங்கவேல் அவர்கள் 11.7.2017 அன்று சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் நகர் போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. S. மணி அவர்கள் சாலை விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 13.07.2017 அன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு மதுவிலக்கு அமல் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. செ. செல்வராசு அவர்கள் உடல்நலக் குறைவால் 13.07.2017 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. R. ரமேஷ் அவர்கள் 08.08.2017 அன்று உடல் நலக்குறைவு காரணமாக காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், ராஜா அண்ணாமலைபுரம், இலுப்பை தோப்பு பகுதியைச் சேர்ந்த திரு. ராமகிருஷ்ணன் என்பவரின் மகன் திரு. முருகன் என்பவர் 20.08.2017 மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், பாப்பாக்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. கலியபெருமாள் என்பவரின் மகன் திரு. முத்துராமலிங்கம் என்பவர் 11.08.2017 அன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், இராமாபுரம் புதூர் பகுதியைச் சேர்ந்த திரு. வருதன் என்பவரின் மனைவி திருமதி. சங்கராயி என்பவர் 11.08.2017 அன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், அச்சரம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி என்பவரின் மனைவி திருமதி. பொன்னம்மாள் என்பவர் 12.8.2017 அன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், இராசப்பன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பன்னீர்செல்வம் என்பவரின் மகன் திரு. மகேந்திரன் என்பவர் 13.08.2017 அன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம், வீரப்பாண்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. வெங்கடேஷ் என்பவரின் மகள் செல்வி. காயத்ரி என்பவர் 9.8.2017 அன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், பழங்கடை கிராமத்தைச் சேர்ந்த திரு. வெள்ளைச்சாமி என்பவரின் மகன் திரு. கணேசன், மின்வாரிய உதவியாளர் 28.07.2017 அன்று மின்சாரம் தாக்கி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 5.8.2017 அன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட நிகழ்வுகளில் உயிரிழந்த காவலர்கள் மற்றும் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மேற்கண்ட 11 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**